## குருநாகல் பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------

1.3.1 தேறிய சொத்துக்கள் குறைவடைதல்

-------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் நிலைமை ரூபா 124,517,730 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது தேறிய சொத்துக்கள் ரூபா 125,001,076 ஆக காணப்பட்டமையால் தேறிய சொத்துக்களில் ரூபா 483,346 இனால் குறைதல் ஒன்றினை காட்டுகின்றது.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுகளுக்கான கொடுப்பனவுகள் என மீள ாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 656,928 இற்கான உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது எதிர்வரும் ஆண்டுகள் தொடர்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 498,500 இற்கான வெளிநாட்டு பிரயாணச் செலவு முற்கொடுப்பனவு என குறிப்பிடப்படாமல் ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டிக் கணக்கின் பெறுமதி ரூபா 20,237,345 தொகையில் 2012 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த ரூபா 1,202,000 தொகை பெறுமதியான நீர் பவுசர்களின் பெறுமதியும், பண்டக் கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் சபையில் காணப்படாத குப்பை ரூபா 347,146 பெறுமதியான குப்பை வண்டிகளின் பெறுமதியும் இதில் அடங்குகின்றது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

--------------------------------------------------------------------------------

மீளாய்வண்டு தொடர்பாக இறுதி மீதியின் கீழ் 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடுகளின் இடையே ரூபா 5,194,494 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 116,234,668 ஆகும். அதற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 96,534,857 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 0.2 என ரூபா 204,133 தொகை ஒன்று 3 வருடத்தினை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதி ஒன்றாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 6,978,928 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------

ரூபா 1,462,304 தொகை பெறுமதியான 192 காலங் கடந்த வைப்பு மீதிகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,591,467 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,825,052 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,233,585

இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 63,762,000 இற்கான மூலதன பெறுவனவுகள் மற்றும் ரூபா 89,518,070 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 3,164,603 இற்கான பற்றாக்குறையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 125,969,483 இல் அண்மித்த நூற்றிற்கு 81.17 என ரூபா 102,253,709 உம் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 63,762,000 இற்கான அண்மித்த நூற்றிற்கு 99.4 வீதம் என ரூபா 63,406,000 தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக வழங்கியிருந்த பணத்தினை அடக்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 103,378,016 இல் அண்மித்த நூற்றிற்கு 44.75 என ரூபா 46,267,908 தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவு ஆகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 74.25 என ரூபா 34,355,832 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்திருந்ததுடன் அப்பெறுமதி வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 89,518,070 அண்மித்த நூற்றிற்கு 23.96 என ரூபா 21,449,361 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதி அண்மித்த நூற்றிற்கு 76.04 ஆகிய ரூபா 68,068,709 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளாகும.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வீதவரி

-----------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் தலைமை அலுவலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் நிலுவை வீத வரி ரூபா 2,614,894 தொகையாகக் காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவைகள் ரூபா 3,556,318 தொகையாகக் காணப்பட்டமையால் நிலுவை வீத வரி பில் போடப்பட்டவைகளில் மீது அண்மித்த நூற்றிற்கு 73.52 ஆக காணப்பட்டது. இந்த நிலுவை 2015 ஜூன் அளவில் ரூபா 1,738,280 வரை குறைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வெல்லவ உப அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக நிலுவை வீதவரி ரூபா 5,232,284 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகள் ரூபா 4,809,317 ஆக காணப்பட்டமையால் நிலுவை வீதவரி பில்போடப்பட்டவைகளின் மீது அண்மித்த சுமார் நூற்றிற்கு 108.79 ஆக காணப்பட்டது.

2.3.2 ஏக்கர் வரி

-----------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வெல்லவ உப அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக நிலுவை ஏக்கர் வரி ரூபா 178,173 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில்போடப்பட்டவைகள் ரூபா 19,000 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் நிலுவை ஏக்கர் வரி பில்போடப்பட்டவைகளில் அண்மித்த நூற்றிற்கு 938 ஆக மாத்திரம் காணப்பட்டது.

2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------

தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 369,861 தொகையும் வெல்லவ உப அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக அந் நிலுவை ரூபா 289,130 தொகையுமாக காணப்பட்டதுடன் அந் நிலுவையை அறவீடு செய்வதற்காக 1987 இன் பிரதேச சபை சட்டத்தின் 150(4) மற்றும் 152(4) பிரிவுகளின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்யப்படல் மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.4 மிகை விதிப்பு

----------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் பிரிவு 172(3) ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புகளின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகை விதிப்புகளின் பெறுமதி ரூபா 95,000 ஆகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

1999 ஆண்டின் போது உள்ளூராட்சி ஊழியர்கள் பிரதான சங்கத்திற்கு 2.5 வட்டியின் மீது வழங்கியிருந்த ரூபா 100,000 கடன்தொகை குறிப்பிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு பின்னர் தீர்ப்பதற்காக கூறப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு குறிப்பிட்ட உடன்படிக்கைக் காலம் 15 வருடங்களை அண்மித்திருந்ததிலும் கடன்தொகையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

04. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பாதீட்டின் பிரகாரம் மூலதன வருமானத்தின் கீழ் ரூபா 83,500,000 தொகை ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் எதிர்ப்பார்த்த நிறுவனங்களில் இருந்து பணம் கிடைக்கப்பெறாமையால் அவற்றில் நெருங்கியிருந்தது அண்மித்த நூற்றிற்கு 38 என ரூபா 31,885,679 மாத்திரமே.

05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்